ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2218/64 - 2021 මාර්තු මස 12 වැනි සිකුරාදා - 2021.03.12

*2218/64 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 1/2012* (IV)

### 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டம்

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61(1) (ப) என்னும் பிரிவின்கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**டக்ளஸ் தேவானந்தா,**
*கடற்றொழில் அமைச்சர்.*

கொழும்பு,
*2021, மாச்சு 09.*

ஒழுங்குவிதிகள்

*2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆந் திகதிய 2023/51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2017 ஆம் ஆண்டின் மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் மீள் ஏற்றுமதி முகாமைத்துவ ஒழுங்குவிதிகள் அதன் 6 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்னர் பின்வரும் ஒழுங்குவிதியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றன :-*

"6அ. ஆறாம் ஒழுங்குவிதியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் தாபனம் :-

(அ) அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் வழங்கப்பட்ட நிதிகள் அல்லது மூலதனத்துடன் ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்படுகின்ற ஒரு கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழுவாகவிருத்தல் வேண்டும் ; அல்லது

1A - PG 5345 — 2625 (2021/03)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(ஆ) இலங்கைப் பிரசைகளாகவுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களினால் முழுமையாகச் சொந்தமாக வைத்திருக்கப்படுதல் வேண்டும் ; அல்லது

(இ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட எந்தக் கம்பனி, சங்கம் அல்லது வேறு ஆட்கள் கழகத்தில், வாக்களிக்கும் பங்குகளின் பெரும்பான்மை இலங்கைப் பிரசைகளினால் வைத்திருக்கப்படுகின்றதோ அந்த ஏதேனும் கம்பனி, சங்கம் அல்லது வேறு ஆட்கள் கழகத்தினால் முழுமையாக சொந்தமாக வைத்திருக்கப்படுதல் வேண்டும்.".

*03-699*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.